20.05.2024

STC. 814 /2024

புகார்தாரர் – சௌந்தரராஜன், த/பெ. சுருளிச்சாமி

புகார்தாரர் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

புகார்தாரரும், எதிரி சௌந்தரராஜானும் நெல் வியாபாரம் செய்யும் தொழில் ஏற்பட்ட நட்பின் அடிப்படையில், எதிரியின் அவசர நிமித்தம் குடும்ப செலவு மற்றும் சில்லரை கடனை தீர்ப்பதற்காகவும், நெல் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும், கடந்த 05.12.2021 ம் வருடம் ரூ.11,00,000/–ஐ அவரது வீட்டில் வைத்து பெற்றுக் கொண்டதாகவும் அந்த கடன் தொகையை 2 மாதத்தில் திருப்பி தருவதாக கூறி, புகார்தாரரின் மேற்கண்ட முகவரியில் வைத்து 03.04.2023 ம் தேதி ரூ.50,000/–ஐ செலுத்தியும், கடந்த 15.08.2023 ம் தேதி இந்தியன் வங்கி, குளித்தலை கிளை, ரூ.50,000/–க்கு 16.08.2023 என்று பின்தேதியிட்டும், பாக்கி ரூ.9,50,000/–க்கு 19.08.2023 என்று பின்தேதியிட்டும் காசோலைகள் இரண்டினை எதிரி கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். அதில் 16.08.2023 ம் தேதியிட்ட காசோலை வரவாகி விட்ட நிலையில், 19.08.2023 ம் தேதியிட்ட எதிரி கொடுத்த காசோலை எண். 066230–ஐ புகார்தாரர், எதிரி கேட்டுக் கொண்டதற்கிணங்க புகார்தாரர் கணக்குள்ள திண்டுக்கல் டவுன், தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,ஆர்.எம் காலனி கிளையில் 19.08.2023 ம் தேதி வசூலுக்கு செலுத்தியதில், எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற குறிப்புடன் மதிப்பு மறுக்கப்பட்டு 21.08.2023 ம் தேதி திருப்பப்பட்டுவிட்டது, மேற்படி விபரத்தையும், காசோலை தொகை கேட்டு புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் 20.09.2023 ம் தேதி அனுப்பி வைத்தார். எதிரி அந்த அறிவிப்பை 22.09.2023 ம் தேதி பெற்றுக்கொண்டு நாளது தேதி வரை பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. மேற்படி கடன் தொகையில் ரூ.50,000/–ஐ முறையீடுதாரரின் வங்கி கணக்கில் 22.09.2023 ம் செலுத்தியுள்ளார். மேற்படி வரவேண்டிய தொகை ரூ.9,00,000/– மட்டுமே உள்ளது. எனவே எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்துகொண்டே காசோலையை கொடுத்து மோசடி செய்து என்னை ஏமாற்றியுள்ளார். மேற்படி எதிரி மீது நடவடிக்கை எடுத்து காசோலைக்கான தொகை பெற்றுத்தருமாறு பிரார்த்திக்கொள்கிறேன்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.05.23 17:54:30 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, DINDIGUL

| | |
|---|---|
| Case No. | : S.T.C. 814 /2024 |
| Deposition of witness for | : PW : 1<br>DW : |
| Name | : Soundararajan |
| Father's Name | : Surulichamy |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.01.2024

நான் இவ்வழக்கின் புகார்தாரர். எதிரியின் மீது காசோலை மோசடி குறித்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்தாரர் தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க எனது முதல் விசாரணை வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன்.

1) 19.08.2023–ம் தேதியிட்ட முறையீடுதாரருக்கு எதிரி கொடுத்த திண்டுக்கல் டவுன், தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள இந்தியன் வங்கி,குளித்தலை கிளை காசோலை (காசோலை எண்.066230) அசல் ம.த.சா.ஆ.1 ஆகும்.

2) 21.08.2023– ம் தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.த.சா.ஆ.2 ஆகும்.

3) 20.09.2023–ம் தேதியிட்ட முறையீடுதாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.த.சா.ஆ.3 ஆகும்.

4) வழக்கறிஞர் அறிவிப்பை 22.09.2023 ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் ம.த.சா.ஆ.4 ஆகும்

5) எதிரி 22.09.2023 ம் தேதி ரூ.50,000/-ஐ செலுத்தியதற்கான ஆதரவு சான்று அசல் ம.த.சா.ஆ.5

எனவே மனு படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.05.23 17:54:35 +0530

Judicial Magistrate No.I
Dindigul.